Form No. 53 (C XXIII,. Cr.P.C)

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE–III, PUDUCHERRY**
**STC. 2689/2023**
**EXAMINATION OF WITNESS LW3 – PW3**

| | | |
|---|---|---|
| Name | : | Kavi |
| Father's / Husband's Name | : | Mani |
| Address | : | Narambai, Puducherry |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03.03.2026.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை, மகாத்மா காந்தி கல்லூரி அருகே வாணியம்பாடி ஓட்டல் எதிரே பிள்ளையார்குப்பம் ரோடு சந்திப்பில் Enfield வாகனத்தில் வந்த நபரை அரசு போக்கவரத்து பேருந்து இடித்ததில் அவருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவரை சம்பவ இடமிருந்து மீட்டு மகாத்மாகாந்தி மருத்துவ கல்லூரிக்கு அனுப்பி வைத்தேன். விபத்து ஏற்படுத்திய பேருந்தின் பதிவெண் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. விபத்துக்குள்ளான இரு சக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் குற்ற

விவர படிவத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான் அது **அதசாஆ.2** ஆகும்.

**<u>எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை</u> - இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**